பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 21 ஞாயிற்றுக்கிழமை (07-10-2001) தொலைபேசி 3378 ஒலி 300

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இலட்சக்கணக்கான தமிழ்மக்களிடம் இருந்து 'பிரபாவை' பிரிக்க முடியாது

### இரத்தத்தீவு நூலில் அனிதா பிராதப்

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனைப்பல லட்சக்கணக்கான தமிழ்மக்களிடம் இருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாதவாறு அவரது செயற்பாடு அமைந்துள்ளது. அவர் வீதியால் நடந்து சென்றால் எவராலுமே அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியாதளவுக்கு சாதாரண மனிதராகவே தென்படுகிறார்.

இவ்வாறு பிரபல இந்தியப் பத்திரிகையாளர் அனிதா பிரதாப் எழுதி வெளியிட்டுள்ள "இரத்ததீவு" (ISLAND OF BLOOD) என்னும் நூலில் தெரிவித்துள்ளார். அவர்எழுதிய அந் நூலில்

இலங்கையிலும் சென்னையிலும் நான் பிரபாகரனைப் பல தடவைகள் சந்தித்துள்ளேன் அவர்சாதாரண மனிதராக நடந்து வந்து தன்னை அறிமுகப் படுத்திய போது நான் வாயடைத்துப் போனேன்.

அவரை நான் முதலில் சந்தித்த போது புலிகளின் ஆதரவாளர்களில் ஒருவர் என்றே நினைத்தேன் என்றும்அனிதா பிரதாப் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். (ம)

## 60வயதைகடந்தவர்களின் சேவை முடிவுக்கு வரும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் பணிபுரியும் 60வயதிற்குமேற்பட்டவர்களின் சேவைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட வுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது சேவைநீடிப்பு அடிப்படையிலோ 60வயதிற்குமேற்பட்ட அரச ஊழியர்களின் சேவைக்காலம் இவ் வருட இறுதிக்குள் முடிவுக்கு கொண்டுவரப்படுமென அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதிதெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற மாகாண அமைச்சர்களுக்கான விசேடகூட்டமொன்றிலேயே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

மேற்படி தீர்மானம் சுகாதார சேவையில் ஈடுபட்டவர்களுக்குப் பொருந்தாது என்றும் தற்போது பயிற்சிபெற்று வரும் ஐயாயிரம் தாதிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப் படுவரென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை

# ஆளும்கட்சிஎம்.பிக்கள் ஆதரித்தால்

# பாராளுமன்றம்கலைக்கப்படும்!

### ஒக்டோபர் 10க்குப் பின்னர் சாத்தியம்

(நமது நிருபர்)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கெதிராக ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணை இம் மாதம் மூன்றாம் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் படும் என எதிர் பார்க்கப் படுகிறது.

இதில் அரசாங்கம் தப்பிப்பிழைக்காத நிலை ஏற்படுமாக இருந்தால் ஜனாதிபதி தனது விசேட அதிகாரத்தைப் பிரயோகித்து இம்மாதம் 10ம் திகதிக்குப் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகிறது.

ஐக்கியதேசியக்கட்சி பாரா... தமிழ்க்கட்சிகளும் தமது ஆத... வாகியுள்ளது.

### நம்பிக்கையில்லா பிரேரணை கூட்டணியின் மத்திய குழு இன்று கூடி முடிவெடுக்கும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுக்கெதிராக ஐக்கிய தேசியக்கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதா? இல்லையா? என்று தீர்மானிப்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழு இன்று கூடி ஆராயவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள மத்திய குழுக்கூட்டத்தில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை, மற்றும் இன்றைய அரசியல் நிலைவரம் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர் ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. [வ]

ஐக்கியதேசியக்கட்சி பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்துள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணைக்கு தற்போது சிறுபான்மைத் தமிழ்க்கட்சிகளும் தமது ஆதரவைவழங்க முன்வந்திருப்பதைஅடுத்தே நம்பிக்கைஇல்லாப்பிரேரணை வெற்றி பெறக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

அரசு-ஜே வி.பி புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து பதவி இறக்கப்பட்

(08-ம் பக்கம் பார்க்க)

யின் மத்திய குழு இன்று கூடி ஆராயப்படவுள்ளது. [வ]

# தமிழ்க் கட்சிகளுடன் பேசி முடிவுகாண ஈ.பி.டி.பி தயார்

## தவராசா எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் நிர்ணய சபைக்கு தமிழர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக தமிழ்க்கட்சிகளுடன் கலந்துபேசி ஒரு முடிவுக்குவர தாம் தயாராக இருப்பதாக ஈ. பி. டி. பி. பாராளுமன்ற உறுப்பினர் எஸ். தவராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தகவல் தருகையில்.

அரசியல் நிர்ணய சபைக்கு சகல தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரு பொதுவானஇணக்கப்பாடடுக்கு வந்து அதன் மூலம் சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு வரைத் தெரிவு செய்யத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## அரசியல் நிர்ணயசபைக்கு

# கூட்டணி - ரெலோ - காங்கிரஸ் இணைந்து மூவரின் பெயர் சிபார்சு

(கொழும்பு)

17 வது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் அமைக்கப்படவுள்ள அரசியல் நிர்ணயசபைக்கு தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதியாக சட்டத்தரணி ஆர் .இ.தம்பிரத்தினத்தின் பெயர் ஏற்றுக்கொள்ளப்படாததை அடுத்து புதிதாக மூன்று பேரின் பெயர்களைதமிழ்க்கட்சிகள் சிபார்சு செய்துள்ளன.

நேற்று மாலை கொழும்பிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக்காரியாலயத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே மூன்று பேரின் பெயர்கள் முன்வைக்கப்பட்டது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ரி. சுந்தரலிங்கம். முன்னாள் யாழ். அரச அதிபர் தேவநேசன் நேசய்யா ஆகியமூவரையுமே தமிழ்க்கட்சிகள் சிபார்சு செய்துளளன.

இக்கூட்டத்தில் அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் ஒன்று சேர்ந்து மேற்படி மூவரின் பெயர்களையும் சிபார்சு செய்துள்ளனர்.

இந்த மூவரின் பெயர்கள் தொடர்பாக நாளை திங்கட்கிழமை பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா, எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோருடன் கலந்து பேசவுள்ளார்கள்.

இதேவேளை ஈ.பி.டி.பி கட்சியினர் தமது சார்பில் கலாநிதி சி- குணசிங்கத்தைப் பிரஸ்தாபிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# மனிதஉரிமை மீறும் படையினர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## இராணுவ தளபதி பலகல்ல உரை

(கொழும்பு)

மனித உரிமைமீறுபவர்கள் இராணுவத்தின் எந்தத் தரத்தைச் சேர்ந்திருந்தாலும் அவர்களுக்குஎதிராக கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத்தளபதி லெப். ஜெனரல்பலகல்ல இராணுவ அதிகாரிகளுக்கான மனிதவுரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டம்பற்றிய கருத்தரங்கை கடந்த வியாழனன்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்

அவர் மேலும் உரையாற்றுகையில கைதுகள் தடுத்து வைப்பு, மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான கருத்தரங்குகளும் இடை விடாமல் நடாத்தப்படும்

(08ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை சேகரிப்பவர் எம்மிடம் கொண்டு வந்து தந்தால் நல்ல விலை தந்து பெற்றுக் கொள்வோம். மல்ரி ஒயில் கே.கே.எஸ். வீதி, இணுவில்.
[C-3581]

### விற்பனைக்கு

கொம்பியூட்டர், பிறின்டர், றோணியோ (கெஸ்ரெனர்) 13 அங்குலக்கட்டர் ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 282, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[3822]

### விற்பனைக்கு

சேவையிலுள்ள போட்டோ கொப்பியர் [Sharp 1016] லமினேற்றிங் மெசின உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: 021-2810 (254) 368, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். அல்லது 881, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(3824)


# எளிய முறையில் இனிதே இடம்பெற்ற
# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 20 ஆவது பட்டமளிப்பு விழா நேற்று கைலாசபதி கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

முதலாவது அமர்வு காலை 9 மணிக்கு ஆரம்பமானது இதற்கு முன்னதாக குடை, கொடி, ஆலவட்டம் சகிதம் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மங்கள வாத்தியங்கள் முழங்க அரங்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பல்கலைக் கழக நிர்வாகத்தினரும் பீடாதிபதிகளும், துறைத்தலைவர்களும் விரிவுரையாளர்களும் பவனியாக அழைத்து வரப்பட்டனர்.

கலைப்பீட பிரதான வாயிலிலிருந்து ஆரம்பமான ஊர்வலம் கைலாசபதி கலையரங்கு வரைஇடம் பெற்றது. முன்னே பல்கலைக்கழக நிர்வாக பீடத்தினர் செல்ல அவர்களின் பின்னே விரிவுரையாளர்கள் சென்றனர்.

தொடர்ந்து ஒவ்வொரு துறைகளினது தலைவர்கள் அணிவகுத்துச் சென்றனர் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா, வணிகத்துறைத் தலைவர் தேவராஜா, இந்துநாகரிகத் துறைத் தலைவர்பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், நுண்கலைத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் உட்பட அனைத்து துறைத் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ. பாலச்சந்திரன், விவசாய பீடாதிபதி சு. இராஜதுரை, விஞ்ஞான பீடாதிபதிபேராசிரியர்குமாரவடிவேல் உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோரும் நடைபவனியாக கைலாசபதி கலையரங்கை அடைந்தனர்.

இதேவேளை கேளிக்கைகள், ஆடம்பரங்கள் எதுவுமின்றி அமைதியான முறையில் இம்முறை பட்டமளிப்பு விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

சிற்றுண்டிச்சாலை மண்டபத்தில் தொலைக்காட்சி மூலம் வழமை போன்று இந்நிகழ்வு நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

5 அமர்வுகளாக இப்பட்டமளிப்பு விழா இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.
(உ-106)

# பல்துறை அறிஞர் சச்சிக்கு
# கௌரவ கலாநிதிப் பட்டம்

துணைத் தலைவர் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் விற்பன்னர். கணிதம், அறிவியல், சோதிடம், கல்வி உளவியல் ஆகிய துறைகளிலெல்லாம் தோய்ந்தெழுந்த நற்கவிஞர் தமது பத்தொன்பதாவது வயதிலேயே மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்வில் முதன்மைச் சித்தி பெற்றவர்.

மளிப்புவிழாவில் ''கலாநிதி'' (Doctor of Philo Sophy) என்ற கௌரவப் பட்டம் வழங்கப்பட்டுள்ளார் என்பது அவரின் நண்பர்கள், மாணக்கர்கள், தமிழ் ஆர்வலர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் பெருமையையும் அளிக்கும் ஒரு செய்தியாகும் ''சாகில் தமிழ் படித்துச் சாகவேண்டும். என் சாம்பல் தமிழ் மணத்து வேகவேண்டும்'' என்ற தமிழ்ப்பித்துக்

குகஶ்ரீ க. சொக்கலிங்கம் (எம். ஏ)

பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் உப அதிபர் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் நீண்ட காலச் செயற்குழு உறுப்பினராகவும் சில ஆண்டுகள் துணைத் தலைவராகவும் பணிபுரிந்து சங்க வளர்ச்சிக்கு ஊன்று கோலாகவும் தூண்டு கோலாகவும் விளங்கியவர் பண்டிதர் கணபதிப்பிள்ளைசச்சிதானந்தன் B A (Hons M Phil (Lond), Dlp. im Ed (Lond) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 20 வது ஆண்டுப் பட்ட

கொண்ட பண்டிதர் தொல்காப்பியத்தைத் தமிழிலக்கிய இலக்கணங்களுக்குக் கலங்கரை விளக்கமாகக் கொள்பவர். தமிழ் மொழியின் மரபுக்கு அந்நூல் ஒன்றே போதும் என்ற உறுதியான கொள்கை அவருக்கு உண்டு.

**நூல்கள்**

'ஆனந்தத்தேன்' என்ற கவிதை நூல், 'தியாக மாலை' என்ற தலைப்பில்எழுதிய கோப்பாய்க் கோமான் கு. வன்னியசிங்கத்தின் வரலாற்று நூல், தமிழர்யாழியல் என்ற ஆய்வு நூல் சாகித்திய விருது பெற்ற 'யாழ்ப்பாணக் காவியம்' ஆகியவை இப்பேரறிஞரின் புகழினை என்றும் நிலைநிறுத்த வல்லன. 'மரபுகாசினியம்' என்ற தமிழ் இலக்கண நூல் இப்பொழுது தயார் நிலையில் வெளிவரும் நாளை எதிர்நோக்கி நிற்கின்றது. இந்த இலக்கண நூல் தமிழின் மரபினைப் பேணித் தமிழர்க்கு வழிகாட்டும் தனி விளக்காய் நிலவும் என்று துணிந்து கூறலாம்.

இத்தகைய பல்துறை அறிஞரை 'கலாநிதி' கௌரவப் பட்டம் கொண்டு பல்கலைக் கழகம் அணி செய்வது பாராட்டத்தக்கதாகும் 'தொன்மை மறவேல்' என்ற மதுடவாசகத்தோடு கடந்த ஏழு தசாப்தங்களாக வடமொழி, தென்மொழி வளர்ச்சியில் ஈடுபட்டுழைக்கும் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கச்சார்பில் இத்தமிழ்ப் பேரறிஞருக்குப் பாராட்டுக்களையும் அஞ்சலியையும் வாழ்த்துக்களையும் மிகுந்த மகிழ்வோடு தெரிவிக்கின்றேன்.

# ச. ச. நிலையம் இயங்குகிறது

(கொழும்புத்துறை)

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் மீண்டும் வழமை போல் இயங்க ஆரம்பித்துள்ளது.
(உ-223)

# மண் அள்ளியவர் அகப்பட்டார்

(நவாலி)

நவாலி கொத்துக்கட்டிப் பகுதியில் டிராக்டரில் ஊரி மண் அள்ளியவர் மானிப்பாய் பிரதேச சபைத் தலைவரிடம் கையும் மெய்யுமாக அகப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

கொத்துக்கட்டிப் பகுதியில் ஊரி மண் அள்ளக்கூடாது என்றும் அள்ளுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்தல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(எ-228)

# கற்கை நெறி இன்று ஆரம்பம்

மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர்களினது 2001/2002 கல்வியாண்டுக்கான கற்கை நெறி நாளை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலைய விரிவுரை மண்டபத்தில் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இக் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களையும் நாளை காலை 8 30 மணிக்கு முன்னர் கடல்வளஅபிவிருத்தி நிலையத்தில் தவறாது சமுகம் தரும்படி கடல்வள அபிவிருத்தி நிலைய இணைப்பாளர், பேராசிரியர் கா. சித்திரவடிவேலு தெரிவித்துள்ளார்.
(எ-221)

# கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(வல்வெட்டித்துறை)

கோப்பாய் வானவில் விளையாட்டுக்கழகம் தயா நகைப்பூங்கா ஆதரவில் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நாளை பி. ப 4.00 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் கின்னஸ் ஸ்ரார் வி. க எதிர் சித்தி விநாயகர் வி. க. மோதவுள்ளன.
(உ-217)

# கொடி வாரம்

(யாழ்ப்பாணம்)

அரிமாக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாளான 1917.10.8 ஆம் திகதியை நினைவு கூரும் வகையில்கொடித்தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி நலிவுற்ற மக்கள் மேம்பாடு கருதி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், வர்த்தகர்களிடம் நிதி சேகரிக்கப்படவுள்ளது.
[உ]

# சீமாட்டி லீலாவதி நினைவுப் பேருரைகள் நாளை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பை முன்னிட்டு வருடாந்தம் நடத்தப்படும் நினைவுப் பேருரைகள்நாளை 8ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

8 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப்பேருரையை ''சைவசித்தாந்தக் கல்வியும் பரத நடனமும்'' என்னும் தலைப்பில் பேராசிரியர் சபா. ஜெயராசாவும்

9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00மணிக்கு சேர் பொன். இராமநாதன் நினைவுப் பேருரையை ''பெரிய புராணத்தில் சமுதாய சிந்தனைகள்'' என்னும் தலைப்பில் தமிழக அறிஞர் சேக்கிழார் அடிப்பொடி திரு. ந. இராமச்சந்திரனும்

10 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரையை 'பஃறுளி ஆறும் பன்மலையடுக்கமும்' என்னும் தலைப்பில் கலைப்பீடாதிபதி எஸ். பாலச்சந்திரனும் நினைவுப் பேருரைகளை ஆற்றவுள்ளனர்.
(உ-106)

# சிறுமி மரணம்

(மட்டக்களப்பு)

ஏறாவூர்ப்பற்று பிரதேசப் பகுதியில வீட்டில் செல்லப் பிராணியாக வளர்த்து வந்த பூனை கடித்ததில், அச்சுதன் டிக்சனா என்ற3வயதுச் சிறுமி பரிதாபமாக மரணமடைந்துள்ளார்.

மேற்படிசிறுமிவீட்டிலுள்ள பூனையுடன் விளையாடிக் கொண்டிருந்த வேளைபூனை கடித்ததாகவும் இதனை பொருட்படுத்தாததால் சில நாட்களின் பின் கடுமையான வலியினால் மரணமானதாகவும் தெரியவந்துள்ளது.
(உ-7)

# மலையக பிரதிநிதியை நியமிப்பதில் சர்ச்சை சந்திரசேகரன் கவலை

(கொழும்பு)

அரசியலமைப்புசபைக்குஇந்திய வம்சாவளி தமிழ் பிரதிநிதியை நியமிப்பதில் சர்ச்சை ஏற்படுத்த முயல்வது பாரதூரமானது என மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

அரசியல் லாபம் கருதியே இந்த சர்ச்சைகள் ஏற்படுத்தப்படுகின்றது-

எனவும் அரசியலமைப்பு சபைக்கு இந்திய வம்சாவளி தமிழர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு கிடைத்த சந்தர்ப்பம் ஒரு வரலாற்றுவெற்றி இதில் அரசியல் லாபங்களையும் குரோதங்களையும் வெளிக்காட்டக் கூடாது எனவும் இது மலையக மக்களுக்கு செய்யும் அவமதிப்பு என்றும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பொ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.
(உ-2)


## மில்க்வைற் சோப் தயாரிப்புகளை அண்ணா கோப்பி

(நவீன சந்தை, திருநெல்வேலி, இணுவில்)
கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
மில்க்வைற் சோப் இண்டஸ்றியல்ஸ்
527, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
[3818]

## மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்

2001 ஆம் ஆண்டின் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில், சித்தியடைந்த, நயினாதீவு, ஶ்ரீகணேச கனிஷ்ட மகா வித்தியாலய, மாணவர்கள்

| | பெற்ற புள்ளி |
|---|---|
| ★ செல்வன் நடராசா பிரணவன் | 138 |
| ★ செல்வி ஏகாம்பரபதி பைரவி | 128 |
| ★ செல்வி யோகநாதன் கோபிகா | 119 |

இவர்களை, மனதார பாராட்டிவாழ்த்துகின்றோம், அதிபர், ஆசிரியர்களுக்கும் எம் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவர்கள் மேலும் கல்வியில் சிறந்துவளர வாழ்த்தும்

ஶ்ரீகணேச சனசமூகநிலையம்
நயினாதீவு -06
[கி/2687]

### ஆசிரியர்களுக்கு சவால் விடுக்கும்

# மாணவக் குழுக்களின் அடாவடித்தனங்கள்

# என்றுமில்லாதவாறு எல்லைமீறி விட்டன

## மேல்நீதிமன்ற நீதிபதி ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

'இன்று கூடாநாட்டில் மாணவ குழுக்களின் அடிதடி விரட்டப்படும் துரதிர்ஷ்ட வசமான நிலையில் ஆசிரியர்கள் இருப்பது எமது தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டைக் கட்டிக்காக்க முயல்வோருக்குப் பெருங் கவலையைத் தோற்றுவித்துள்ளது.

மாணவ குழுக்களின் அடாவடித்தனங்கள் இன்றைய சூழலில் என்றுமில்லாதவாறு எல்லைமீறி விட்டது. 'இவ்வாறு கூறினார் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராசா;

உலக ஆசிரியர் தினத்தை யொட்டி யாழ். மாநகரசபையும் யாழ். மாநகர சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட சன சமூக நிலையங்களும் இணைந்து நடத்திய முன் பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு விழா கடந்த வெள்ளிக் கிழமை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் யாழ். மாநகர முதல்வர் நடராஜா ரவிராஜ் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்; ஆசிரியர் சமுதாயம் பல கட்ட வளர்ச்சிகளை அடைந்துள்ளது. அதேபோல் மாணவ சமுதாயமும் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து வந்து இன்றைய கேவல நிலையை அடைந்துள்ளது ஆனால் இதற்கு விதி விலக்கான மாணவர்களும் இருக்கிறார்கள்.

1840 களில் இலங்கையில் பொதுவாகவும் யாழ்ப்பாணத்தில் கூடுதலாகவும் பாடசாலைகள் தாபிக்கப்பட்டன. ஆனால் குரு, சீடபரம்பரை உறவு ஆறுமுக நாவலர் காலத்திலும், அதற்கு முற்பட்ட காலத்திலும் சிறப்புற்றிருந்தது.

அப்போது இருந்த கல்வி கேள்விமுறை, அதாவது கல்வியோடு ஒழுக்கமும் புலனடக்கமும் சேர மிளிர்ந்த பண்பு இன்றைய மாணவ சமுதாயத்திற்கு இன்றியமையாதது.

ஆசிரியத் தொழிலில் முன் பள்ளி ஆசிரியர்களின் பங்களிப்பே எதிர்கால வலுவான சந்ததியைத் தோற்றுவிப்பதற்கு அடிநாதமாக விளங்குவது எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும். அவர்கள் சமூகத்தின உயிர் நாடிகள் என்றார்.

யாழ். மாநகரசபை முதல்வர் ந. இரவிராஜ் தனது தலைமையுரையில்;

இன்றுள்ள சூழ்நிலையில் தமிழ் மக்களின் அரிய பொக்கிஷம் கல்வியாகும். முன்பள்ளி ஆசிரியர்களை மாநகரசபை கௌரவிப்பது இதுவே முதல் தடவையாகும். இன்று இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் எமது கலை கலாசார, விழுமியங்கள் அருகி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. பண்புள்ள சமுதாயத்தை உருவாக்குகின்ற ஆசிரியர்களின் பணி அளப்பரியது என்றார்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் இ. இராமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநகர சபை உறுப்பினர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டார். (உ-106)

## மாணவன் மரணம்

(கொழும்பு)

மரக்கட்டை வீழ்ந்ததால் மாணவனொருவன் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவமொன்று தெனியாய தமிழ் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக மரக்கட்டையொன்றை காவிச் சென்ற மாணவர்கள் பாரம் தாங்காமல் அதனை கைவிட்டபொழுது இடையில் சிக்கிய 6ஆம் தர மாணவனான வேலாயுதம் ஆனந்தகுமார் (வயது 11) என்பவரே உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் தொடர்பாக தெனியாய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [உ-5]

## 'இங்கிருந்து' சிறுகதை தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

''நண்பர்கள் வட்டம்'' வெளியிடும் '' இங்கிருந்து '' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சோ குலராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது

வாழ்த்துரைகளை கலாநிதி க. குணராசா, யாழ் இநதுக் கல்லூரி அதிபர் அ. சிறிக்குமரன் ஆகியோரும் வெளியீட்டுரையை ''சிற்பி'' சரவணபவனும் நிகழ்த்தவுள்ளனர்.

மதிப்பீட்டுரைகளை அ. யேசுராசா, செம்பியன் செல்வன் ஆகியோர் ஆற்றவுள்ளர். (உ-19)

## தண்டப்பணம் அறவீடு

(துன்னாலை)

இவ் வருடம் ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையான 8மாதங்களில் வடமராட்சிப்பகுதியைச் சேர்ந்த15 பேர் கசிப்பு, கள் வைத்திருந்தமை தொடர்பான வழக்குகள் பருத்தித்துறை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டதன் பேரில்,

அவர்கள்வசமிருந்து5இலட்சத்து 50ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறிவிடப்பட்டுள்ளது; (உ-4)

## வரணிப் பகுதியில் சட்டவிரோத மண்ணகழ்வு

(துன்னாலை)

வரணி வடக்குப் பகுதியில் மண் அகழ்வு நடவடிக்கை பெருமளவில் இடம்பெற்று வருவதாகவும்,

அகழப்படும் ஒரு லோட் மண் 200 ரூபா வரையில் விற்கப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு மண் ஏற்றும் வகையில் செல்லும் உழவு இயந்திரங்கள், தம்பான், கரம்பான், அடிவாய்க்கால் ஆகிய வயல்வெளிகள் ஊடாகச் செல்வதால், விதைப்பை மேற்கொண்ட விவசாயிகளும் நிலத்தைப் பண்படுத்திய விவசாயிகளும் பெரும் இடைஞ்சல்களுக்கு ஆளாவதாகவும்சுட்டிக் காட்டப்பட்டுள்ளது; (உ-41)

## பொருளாதார நெருக்கடி குறித்து ஆராய 15 பேர் கொண்ட குழு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து ஆராயும் முகமாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க 15 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இக் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்அமர துங்க நியமிக்கப் படஇள்ளார்.

தொழிற்சாலைகள் மூடப்பட்டமை தொடர்பாகவும் பலர் சேவையிழந்தமை குறித்தும் இவர்கள தனித்தனியாக ஆராயவுள்ளனர். (உ-5)

## மைற்ஸ் நோய்த் தாக்கம்

(வரணி)

அரியாலைப் பகுதித் தென்னம் பிள்ளைகளில் மைற்ஸ் நோய்த் தாக்கம் மிகுந்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனைத் தடுப்பதற்கு இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக அறியப்படவில்லை.

(உ-221)

## சேமிப்புக்கேற்ப பொருட்கடன்

(அராலி)

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் சேமிப்புக்கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ஏற்ற அளவில் பொருட்களைச் சங்கக்கிளைகளில் கடனாகப் பெற்றுக் கொள்ளலாமெனவும்

மாத இறுதியில் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சேமிப்புப் பணத்திற்கு நடைமுறையிலுள்ள வட்டி வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ- 214)

## கொழும்புக்கு நிகராக வங்கிச் சேவைகள் இங்கும் விரிவாகும்

### உதவிப் பொது முகாமையாளர் தெரிவிப்பு

கொழும்பில் உள்ள வங்கி வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ளும அதேயளவு சேவைகளை யாழ். மக்களும் பெற்றுக் கொளள வேண்டும் என்ற நல்ல நோக்கு அடிப்படையின்முதற்கட்டமாகவே சனிக்கிழமைகளிலும இலங்கை வங்கியின்மேறதரக் கிளையில் பணிகள ஆரம்பிக்கப்பட்டுளளன.

யாழ். இலங்கை வங்கியின் மேற்தரக் கிளையில் சனிக் கிழமைகளிலும் வழமையான பணிகள் ஆரம்பிக்கப்பட்டதன் ஆரம்ப நாளான நேற்றைய தினம் அங்கு இடம் பெற்ற நிகழ்வில் சேவையை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து உரையாற்றுகையில் வட பிராந்தியஉதவிப் பொது முகாமையாளர் திருமதி க. துரைராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும உரை நிகழ்த்துகையில் விரிவுபடுத்தப்பட்ட வங்கியின் சேவைகள குறித்து விளக்கமாகஎடுத்துரைததார்

இந் நிகழ்வில் வங்கியின் சட்ட ஆலோசகரும் மூத்த வாடிக்கையாளருமான கனகரட்ணம், திருமதி துரைராசா வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை அதிபர் திருமதி பொன்னம்பலம், நல்லை ஆதீன முதல்வர், அருட்தந்தை செல்வராஜா, நாகவிகாராதிபதி ரத்தினா சாரதேரர், அரசாங்க அதிபர் கே.சண்முகநாதன், இலங்கை வங்கி மேற்தரக் கிளையின் முகாமையாளர் க. உலகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர் ( உ-10,19)

## உதைப்பந்தாட்டம்

(சுண்டுகுளி)

அண்மையில சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலயாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி உதைபபந்தாடட அணிகளுக்கும்சுண்ணாகம் ஸ்கந்தவரோதயகல்லூரிஉதைப்பந்தாட்ட அணிகளுக்குமிடையேயான போட்டிகள் இடம்பெற்றது;

இப் போட்டிகளில் 3 வது அணிக்கான ஆட்டத்தில் 3:1 என்ற கோல்கணக்கில் ஸ்கந்தவரோதய அணி வெற்றி பெற்றது. 2 வது அணிக்கான ஆட்டத்திலும் 4:1 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயஅணி வெற்றிபெற்றது 1 வது அணிக்கான ஆட்டத்தில் 3:2 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதய அணி வெற்றி பெற்றது.

மூன்று அணிகளுக்கான ஆட்டங்களிலும் ஸ்கந்தவரோதயகல்லூரி வெற்றி பெற்றது. இப் போடடிகளுக்கு நடுவர்களாக ரி.ஆர் நித்திவிநாயகம், எஸ். சுரேந்திரன், கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம் ஆகியோர் கடமையாற்றினர் (உ-10)

## கல்யாண மண்டபம்

(வரணி)

கரணவாய் தெற்கு அருள்மிகு மூத்த விநாயகர் ஆலயத்தில் புதிய கல்யாண மண்டபம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான பெருந்தொகை நிதியை அவ்வூர் மக்களும் வெளிநாட்டில் வதியும்அவ்வூர் மக்களும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது;

[உ-221]

## 16 பேரிடம் இருந்து 84 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவீடு

(துன்னாலை)

கடந்த வருடம் சட்டவிரோதமாக கள்ளு கசிப்பு மற்றும் கோடாவைத்திருந்த குற்றத்திற்காக பருத்தித்துறை மதுவரித்திணைக்களத்தினரால் வடமராட்சிப் பகுதியில் கைது செய்யப்பட்ட 16 பேர் தொடர்பானவழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாகவும்.

இவர்களிடம்இருந்து84ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டதாகவும் பருத்தித்துறை மதுவரித் திணைக்களப்பொறுப்பதிகாரிறோகன் சஞ்சேறாயு தெரிவித்தார். கரணவாய், அல்வாய், துன்னாலை, ராஜகிராமம் உடுப்பிட்டி, புலோலி ஆகிய பகுதிகளைச்சேர்ந்தவர்களில் இவர்களில் அடங்குவர் எனவும்;

இவர்களில்உடுப்பிட்டியைச் சேர்ந்த ஒருவரிடம் 8 லீற்றர் கோடா வைத்திருந்த குற்றத்திற்காக16ஆயிரம ரூபா தண்டப்பணமாக அறவிடப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-4)

## செய்முறை பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யா: சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் இருந்து க. பொ. த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் இம் மாதம் 10, 11, 12 ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளன.

சங்கீதம், நடனம் செய்முறைப் பரீட்சை 10 ஆம் திகதியும், மனைப் பொருளியல் செய்முறைப் பரீட்சை 11 ஆம் திகதியும், விவசாய, உடற்கல்வி, செய்முறைப் பரீட்சை 12 ஆம் திகதியும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகப் பாடசாலை அதிபர் மு. பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்; (உ)

## வீட்டுத் தோட்டம் பற்றிய விழிப்புக் கருத்துரை

(மீசாலை)

மனிதமுன்னேற்ற நடுநிலையத்தினால் கிராமம் தோறும் உருவாக்கப்பட்ட உயிர்ப் பூட்டல் குழுக்களின் வடமராட்சிப் பிரதேச குழுத்தலைவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் அண்மையில் கரவெட்டியில் நடைபெற்றது;

அன்றையதினம், பொலிகண்டி உயிர்ப் பூட்டல் குழுவினரால் ''மலரும் மொட்டுக்கள்'' என்ற கையெழுத்துச் சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டதுடன்,

கன் பொல்லை கிராமத்தில் சிரமதானம் மூலம் வீதி திருத்தம் மற்றும் வீடு வீடாகச் சென்று வீட்டுத் தோட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரைகளும் வழங்கப்பட்டன; (உ-229)

## வன்னிக்கு மருந்து அனுப்ப நடவடிக்கை

[வவுனியா]

இராணுவ கட்டுபாடற்ற வன்னிப பிரதேசத்திற்கு மேலதிக மருந்துப் பொருட்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியா மாவட்டஅரசாங்க அதிபர் கே,கணேஷ் தெரிவித்துள்ளார்,

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே இது குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டுளளது.

இக் கூட்டதில் ஜனாதிபதி செயலக சுகாதார ஆளணிக்கு பொறுப்பான பிரதிபணிப்பாளர் கிறிஸ்டிசில்வா.சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி மஹிபால ஹேரத், வடக்கு-கிழககுமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்,ரத்நாயக்க, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.ஐயாத்துரைமுதலியோர் கலந்து கொண்டனர்.

(எ-4)

# கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் பெறும் தமிழகத்தின்

# சேக்கிழார் அடிப்பொடி தில்லை ஸ்தானம் ந. இராமச்சந்திரன்

நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 20 வது பட்டமளிப்பு விழாவின் போது, கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டம் பெற்ற **சேக்கிழார் அடிப்பொடி தில்லைஸ்தானம் நடராஜன் இராமச்சந்திரன்** பற்றி யாழ்.பல்கலைக் கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் ஆற்றிய அறிமுகவுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

(ஆ:ர்)

பேராசிரியர்
**சி. க. சிற்றம்பலம்**
தலைவர்
வரலாற்றுத்துறை யாழ். பல்கலைக்கழகம்

தமது நண்பர்களாலும் பாராட்டுபவர்களாலும் ரி. என் .ஆர்.என அன்புடன் அழைக்கப்படுபவராகிய திரு.இராமச்சந்திரன் அவர்கள் 1934 ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலுள்ள திருநட்டம் என்னுமிடத்தில் பிறந்தவர். இவர் 1956 ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நியாயவாதியானார். சிறந்த பணவருவாயைத் தரவல்ல சட்ட வல்லுனராகப் பணியாற்றினாலும் சட்டத்துறையை விட தமிழ் மற்றும் ஆங்கில மொழி சார்ந்த இலக்கியங்களை ஆழமாக வளம்படுத்தும் விருப்பத்தினால் இத்துறைக்கு இவர் ஈர்க்கப்பட்டார். தமக்குமுன் சட்டத் துறையில் நன்கு பிரகாசித்த பரிதிமாற் கலைஞர் சூரியநாராயண சாஸ்திரி மற்றும் ரா. பி. சேதுப்பிள்ளை போன்று ஆர்வத்தினால் இத்துறைக்கு மாறியதனால் உண்மையில் சட்டத்துறைக்கு ஓர் இழப்பாகவும் தமிழ்ப்பண்பாட்டிற்கு ஒரு வரப்பிரசாதமாகவும் அமைந்தது

தமிழகத்திற்கும் இலங்கைக்குமிடையேயுள்ள கலாசாரத் தொடர்பு கிறிஸ்து சகாப்தத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இருந்து வந்தபோதும் இங்கு வாழும் தமிழர்கள் தமது கலாசார மற்றும் ஆன்மீக வளத்திற்கு இந்தியாவையே நோக்குவது மரபாயிற்று. பிரித்தானியரின் வருகையினாலும் அதன் பயனாய் ஏற்பட்ட நவீன மயமாக்கத்தினாலும் தொன்மைக்காலம் முதல் இருந்து வந்த தொடர்பு மேலும் நன்கு இறுக்கமாக வலுப்படலாயிற்று.

இலங்கையிலும் தமிழகத்திலும் வாழும் தமிழரிடையே நிலவும்பொதுவானபண்பாட்டுப் பாரம்பரியம் தொடர்பான உள்ளுணர்வைத் தூண்டுவதில் நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முக்கிய பணியாற்றியவர். அவர் காட்டிய வழியில் சி வை: தாமோதரம்பிள்ளை போன்ற பெரியார்கள் தொடர்ந்தனர். இலங்கையைச்சேர்ந்த இத்தகைய அறிஞர்கள் தமிழகத்தில் வாழ்ந்து ஆய்வு முயற்சியில் ஈடுபட்டபடியினால் இருவழிகளிலும் கருத்துப் பரிமாற்றம் நிகழ்ந்து ஒரு புது யுகம் பிறக்க ஏதுவாயிற்று. தமிழகத்திலும் இலங்கையிலும் தமிழ் மற்றும் இந்துசமயம் சார்ந்த ஆய்வினை வளம் படுத்தக் கூடியவாறு சங்கங்களும் சஞ்சிகைகளும் உருவாகின.

வருடந்தோறும் நடைபெறும் ஆய்வரங்குகள், மகாநாடுகள்போன்றவற்றில்பங்கு கொள்வதற்கும் ஆய்வுச்சஞ்சிகைகளில் எழுதுவதற்கும இருபக்கங்களிலிருந்தும் அழைப்புகள் விடுக்கப்பட்டு வருவது இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகின்றது. இவ்வகையில் இப்பல்கலைக்கழகத்தின் கருவூலமாக விளங்கிய பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவனராகிய சேர். பொன். இராமநாதன் அவர்கள் 1904 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் நடந்த முதலாவது சைவசித்தாந்த மகாநாட்டிற்குத் தலைமை வகிப்பதற்காக அவர் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது சைவசித்தாந்தத்தில் மிகச்சிறந்த புலமைத்துவம் மிக்கவராகிய திரு. ரி. என். ஆர். அவர்களை சேர். பொன். இராமநாதன் நினைவுச் சொற்பொழிவினை நிகழ்த்துவதற்கு எமது பல்கலைக்கழகம் அழைத்துள்ளமை எவ்வளவுதூரம் பொருத்தமாகவுள்ளது என்பதை மேற்குறித்த சம்பவம் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

ரி. என். ஆர்: அவர்கள் சுப்பிரமணியம் பாரதியை பெரிதும் நேசிப்பவர். அவரது பாடல்களை மொழிபெயர்த்துள்ளார். அவரது மொழிபெயர்ப்புப் பற்றி அகில இந்திய வானொலி விமர்சகர் ஒருமுறை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். கற்பனை வளம் மிக்கவராகவும் சிறந்த கவிஞராகவும் அறிஞராகவும் விமரிசகனாகவும் மறைஞான சிந்தனையாளராகவும் தத்துவவாதியாகவும் மொழி பெயர்ப்பாளராகவும் பதிப்பாசிரியராகவும் ரி என். ஆர் பல்வேறு நிலைகளில் மிகவும் மகிழ்ச்சிகரமாக ஈடுபட்டு சிறந்த ஆற்றல் மிக்கவராகத் திகழ்பவர். இவரது ஆற்றல் இன்றும் விளங்கிக்கொள்ள முடியாத ஒரு புதிராகவே உள்ளது தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகம் பாரதியாரின் அனைத்துப் பாடல்களையும் மொழிபெயர்த்து வெளியிடும் முயற்சியில் அவற்றை பதிப்பிக்கும் பணிக்கு ரி. என். ஆர். அழைக்கப்பட்டமை அவருக்குக் கிடைத்த மற்றுமொரு கௌரவமாகும். பாரதியாரின் பிறந்தநாள் வைபவத்தின்போது இவர் கௌரவிக்கப்பட்டார். அப்போதைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவரைப் புகழ்ந்துரைத்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் இவரது ஆர்வம் சேக்கிழார் பற்றியும் சைவசித்தாந்தம பற்றியுமே அமைந்தது. சைவசிந்தாந்த ஆய்வில் இவரை ஈடுபாடு கொள்ளச் செய்தவர் சேக்கிழார் பெருமானே என்பது இவரது நம்பிக்கை. 4286 பாடல்களைக் கொண்ட பெரிய புராணத்தை முதன் முதலாக இவரே மொழி பெயர்த்தவர். இதனை விட வேறு பல துறைகளும் இவருக்கு புகழீட்டிததந்தன. திருக்கோவையார், காரைக்கால் அம்மையாரது பாடல்கள், திருநாவுக்கரசு நாயனாரின் முதலாம் திருமுறையில் வரும் திருந்தாண்டகம், பதினான்கு மெய்கண்ட சாஸ்திர நூல்களில் ஏழு நூல்கள் ஆகியவற்றையும் மொழி பெயர்த்த பெருமை இவருக்குண்டு. தமிழ் மற்றும் சமஸ்கிருதம் தவிர்ந்த ஏனைய மொழிகளில் வெளிவந்தசைவ சித்தாந்த நூற் பட்டியல் தொடர்பாக விளக்கங்களுடன் கூடியதாக அவர் வெளியிட்ட கைந்நூல் சைவம்பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு மிகவும் இன்றியமையாததொன்றாகும் என்பது குறிப்பிடற்பாலது. மேலும் பதி, பசு மற்றும் பாசம் பற்றியும் சேக்கிழார் பற்றியும் இவர் எழுதி வெளியிட்ட கைந்நூல்கள் சிந்தனைக்கு விருந்தாக அமைவன. எதையும் நிறைவாகவும் சிறப்பாகவும் வெளியிட வேண்டும் என்ற கொள்கையுடையவராதலால் திரு. ரி. என். ஆர். அவசரப்பட்டு எதனையும் வெளியிடாமல் தாம் ஆய்வு செய்பவை தொடர்பான விபரங்களைத் தேடிப் பிடிப்பதில் பல வருடங்களாகக் கடுமையாக ஈடுபடுபவர். இவரது தரம்மிக்க ஆய்வுக் கட்டுரைகளினால் இவர் பல்கலைக்கழக அறிஞரது பாராட்டைப் பெற்றார். இவர் நிதானத்துடன் செயற்படுபவர் என்பதோடு ஊக்கம்மிக்க புலமையாளருமாவர். வார நாட்களில் பெரியபுராணம், சைவசித்தாந்தம், வேதாந்தம் மற்றும் கம்பராமாயணம் ஆகியவற்றில் வகுப்புக்களை நடத்தி வருபவர். உள்ளூரிலும் மற்றும் சர்வதேச நிலையிலும் பல மகா நாடுகளில் பங்கு கொண்டுள்ளார். இவர் சைவ சித்தாந்தத்தில் உள்ள தமது ஆழ்ந்த புலமைத்துவத்தினால் பல சந்தர்ப்பங்களில் அறிஞர்களை வியப்படையச் செய்துள்ளார்: சைவ மகாநாடுகளில் ஆர்வத்துடன் அழைக்கப்படும் பேச்சாளராக விளங்குபவர். இம்மகாநாடுகளில் பங்குகொள்ளும் புலமையாளர்கள் சைவசித்தாந்தம் தொடர்பான சிக்கலான விடயங்களுக்கு இவர் தரும் தெளிவான விளக்கங்களினால் பெரிதும் கவரப்பட்டனர்.

இவற்றை விட அவர் கலா சம்ரக்ஷண சங்கத்தின் ஆரம்ப காலத் தலைவருமாவார். இச்சங்கம் மிகவும் அருமை பெருமைமிக்க பழைய கையெழுத்துப் பிரதிகளை மறுபிரசுரம் செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். சைவசிந்தாந்தம், மற்றும் சைவசித்தாந்த சமாஜத்தின் சஞ்சிகை ஆகியவற்றின் ஆசிரியராக விளங்குபவர். மேலும் சென்னை தர்மபுரத்திலுள்ள அனைத்துலக சைவசிந்தாந்த ஆய்வு நிறுவனத்தின் கௌரவ பணிப்பாளருமாவார். இவரது அளப்பரிய பணிகளுக்காக தர்மபுர ஆதீனம் இவரை கௌரவித்துள்ளது. 1984 ஆம் ஆண்டு 'சைவசிந்தாந்த கலாநிதி' என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

வேந்தர் அவர்களே, ஆழ்ந்த கடமையுணர்வுடன் சைவ சிந்தாந்த ஆய்வுத் துறைக்கு ஆற்றிவரும் அளப்பரிய பங்களிப்பிற்காகவும், இலங்கைத் தமிழ் புலமைத்துவத்திற்குக் காட்டும் நன்றியுடன் கூடிய அளப்பரிய மரியாதைக்காகவும், கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை அளிப்பதற்காக திரு. தில்லைஸ்தானம் நடராஜன் இராமச்சந்திரன் அவர்களைத் தங்களுக்கு பெருமையுடன் அறிமுகம் செய்கின்றேன். □

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

**சங்கானை**

| | |
|---|---|
| 158828 ஏ | 202249 ஏ |
| 203421 ஏ | 203513 ஏ |
| 203513 சி | 203664 ஏ |
| 203664 பி | 203709 ஏ |
| 203709 பி | 203842 ஏ |
| 205353 ஏ | 205353 சி |
| 205394 ஏ | 205394 பி |
| 205394 சி | 205394 டி |
| 205394 ஈ | 205394 எப் |
| 205451 ஏ | 205451 பி |
| 205451 சி | 205451 டி |
| 205527 ஏ | 205527 பி |
| 205528 ஏ | 205528 பி |
| 205592 ஏ | 205592 பி |
| 205713 ஏ | 205713 பி |
| 205815 ஏ | 205936 ஏ |
| 205936 பி | 205936 சி |
| 206124 ஏ | 206124 பி |
| 206124 சி | 206124 டி |
| 206125 ஏ | 206125 பி |
| 206125 சி | 206126 ஏ |

**நல்லூர்**

| | |
|---|---|
| 192216 ஏ | 192216 பி |
| 196051 ஏ | 196051 பி |
| 197901 ஏ | 201934 ஏ |
| 201934 பி | 201934 டி |
| 201934 ஈ | 201949 ஏ |
| 203427 ஏ | 203427 பி |
| 203427 சி | 203680 ஏ |
| 203730 ஏ | 293730 பி |
| 203785 ஏ | 203786 ஏ |
| 205490 ஏ | 205490 பி |
| 205688 ஏ | 205689 பி |
| 203688 சி | 206170 ஏ |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 189319 ஏ | 189319 பி |
| 199371 ஏ | 201980 ஏ |
| 202057 ஏ | 202057 பி |
| 202162 ஏ | 202162 பி |
| 202162 சி | 203884 ஏ |
| 203884 பி | 205412 ஏ |
| 205482 ஏ | 205486 ஏ |
| 205520 ஏ | 205520 பி |
| 205521 ஏ | 205683 ஏ |
| 205683 பி | 205683 சி |
| 205753 ஏ | 205958 ஏ |
| 205958 பி | |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 205308 ஏ | 205343 ஏ |
| 205343 பி | 205470 ஏ |

**உடுவில்**

| | |
|---|---|
| 198773 சி | 192102 ஏ |
| 192102 பி | 198773 ஏ |
| 198773 பி | 203424 ஏ |
| 203424 பி | 203424 சி |
| 203424 டி | 203713 ஏ |
| 203713 பி | 203713 சி |
| 205480 ஏ | 205480 பி |
| 205570 ஏ | 205570 பி |
| 205570 சி | 205599 ஏ |
| 205599 பி | 205640 ஏ |
| 205669 ஏ | 205669 பி |
| 205760 ஏ | 205765 ஏ |
| 205765 பி | 205800 ஏ |
| 205938 ஏ | 205997 ஏ |
| 205997 பி | 206152 ஏ |
| 206187 ஏ | 206187 பி |
| 206189 ஏ | |

**தனியார் வைத்திய நிலையத்திற்கு**
**பயிலுநர் தேவை**

★ **மருத்துவ வரவேற்பாளர்**
★ **தாதி**

★ வயதெல்லை - 16 - 25 வரை
★ கல்வித் தகமை - O/L

எமது விண்ணப்பப் படிவத்தில் மட்டும் விண்ணப்பிக்கவும், பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புத் தொகையாக ரூபா 600 வழங்கப்படும்.

குறிப்பு

தகுதியானவர்களுக்கு பயிற்சி முடிவில் வேலை வழங்கப்படும். அத்துடன் எவ்விடத்திலும் வேலை செய்யக்கூடிய சான்றிதலும் வழங்கப்படும்.

E.N.T.மெடிக்கல் கிளினிக்,
24.முனிஸ்வரா வீதி,
யாழ்ப்பாணம்.

(3825)

## தீ விபத்து

(கொழும்பு)

மாத்தளை கொங்கால பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்று தீக்கிரையாகியுள்ளது.

வெள்ளியிரவு நிகழ்ந்தஇச்சம்பவத்தில் 5 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மாத்தளை பொலிசார் தெரிவித்துள்ளர்.

மின்ஒழுக்கே இத் தீ ஏற்பட்டமைக்கான காரணம் என தெரிவிக்கப்படுகிறது. (எ-4)

## புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களின் புனரமைப்பு பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் இடம்பெயர்ந்தோர் நலன்புரிநிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு தத்தம் குடியிருப்புக்களை புனரமைப்பதற்குக் தேவையான இடுகள், மரங்கள், கயிறு, ஈர்க்கு என்பன உட்பட பல பொருட்களும் வழங்கப்பட்டுள்ளதுடன்புதிய குடிசைகள் அமைக்கப்படுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(உ)

## இன்று ஒரு தகவல்

# புலியைக் கொன்றவன்

காட்டுப்பகுதியில் இருந்த தன்வயலைக்காவல் காப்பதற்காகச் சென்றான் உழவன் ஒருவன். வழியில் ஒரு ஆடு தன்னந்தனியாக மேய்ந்து கொண்டிருந்தது. யாரும் அறியாமல் இந்த ஆட்டைச் சுட்டுச் சாப்பிடுவோம் என்று நினைத்தான் அவன். தன் கையிலிருந்த கோடரியால் அதைக் கொன்றான். இரவு நேரம் வந்தது மேடானபகுதி ஒன்றில் தீமூட்டினான் அவன். அந்த ஆட்டைக் கம்பியில் குத்தி வாட்டத் தொடங்கினான். இறைச்சிநன்றாகவெந்தது. சிறிது சிறிதாக அதைப் பிய்த்துச் சாப்பிடத் தொடங்கினான் அவன். மீந்த எலும்பைக் கீழே வீசினான்.

ஆட்டின்மணத்தை நுகர்ந்த புலி ஒன்று அங்கு வந்தது. அவன் வீசும் எலும்புகள் எல்லாம் தரையில் விழாமல் வாயினால்பிடித்துத் தின்றது. எலும்பு கீழேவிழும் சத்தம் ஏன் கேட்கவில்லை என்று திரும்பிக் கீழே பார்த்தான் அவன் எலும்பைக் கடித்தபடி புலி ஒன்று நிற்பதைக் கண்டு திடுக்கிட்டான்; இந்தப் புலியிடமிருந்து தப்பித்துக் கொள்ளவழியேஇல்லை. குரல் கொடுத்தாலும் உதவிக்கு வருபவர் யாரும் இல்லை. எலும்புகள்எல்லாம் தீர்ந்த பிறகு நான் புலிக்கு உணவாக வேண்டியதுதான் என்ன செய்வது என்று' சிந்தித்தான். அவன் அருகேயிருந்த இரும்புக் கோடரி அவன் கண்களில் பட்டது. அதைப் பார்த்ததும் நல்ல திட்டமொன்றுஉருவாயிற்று. அந்தக் கோடரியை எடுத்துத் தீக்குள் போட்டான் அவன். சிறிது நேரத்தில் நன்கு சூடாகியது அது சிறிது நேரம் இடைவெளிவிட்டு எலும்புகளையும், தசைகளையும் புலிக்குப் போட்டுக் கொண்டேயிருந்தான் அவன். புலியும் அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

தீப்போல எரிந்து கொண்டிருந்த கோடரியை ஒரு பெரிய குச்சியால் எடுத்து புலியை நோக்கி எறிந்தான் அவன். தசைத் துண்டுதான் விழுகிறது என்று நினைத்த புலி அதை ஆர்வத்துடன் வாயில் கவ்வியது. அவ்வளவு தான்! ஒரு நொடிக்குள் அதன் வாய், உதடு தொண்டை எல்லாம் கோடரியின் சூட்டால் வெந்தன. வேதனை தாங்காதபுலி அலறியபடி அங்கேயே இறந்து விழுந்தது.

பேராசிரியர் எ சோதி

## பாடசாலைகளில் மேலதிகமாக
# கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு
# 2002 இற்கு முன் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் மேலதிகமாக கடமையாற்றும் ஆசிரியர்கள் ஆசிரியப் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்படவேண்டுமென ஜனாதிபதிபணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் மாகாண முதலமைச்சர்கள் மத்தியில் பேசும் போது இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ் மொழிமூலம் பாடசாலைகளிலும்மலையக பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் புதிய ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுவதுடன் இந்த நியமனங்களில் அரசியற் தலையீடு எதுவும்இடம்பெறக்கூடாதெனவும் தெரிவித்தார்;

இதேவேளை, தமிழ்மொழி மூல பாடசாலைகள் மற்றும மலையக பாடசாலைகளைத் தவிர நாட்டின் ஏனைய பாடசாலைகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் எதிர்வரும் காலங்களில் வழங்கப்படாதெனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## திருமலை மாவட்டச் செயலர் இடமாற்றம்
# கண்டித்து அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டச் செயலர் எஸ். ரி சந்திரதாஸ மேல் மாகாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டமை குறித்து அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்று அண்மையில்கொழும்பு உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான எஸ். டபிள்யு. பி. வடுகொடபிட்டிய, சி.வி. விக்னேஸ்வரன், ஜே ஏ என். டி. சில்வா ஆகியோர் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட இம் மனுவை அடுத்து, இந்த இடமாற்றத்தை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை இடை நிறுத்திவைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தாக்கல் செய்யப்பட்ட இம் மனுவில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரிச்சட் பத்திரான உட்பட 7 பேர் பிரதி வாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (உ-5)

## உதைபந்தாட்டம்

(சுண்டுக்குளி)

கடந்த செவ்வாய்க்கிழமை ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் யாழ். பற்றிக்ஸ், சுன்னாகம் ஸ்கந்தவரோதய அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்றன.

3 வது அணிக்கான ஆட்டத்தில் 3:1 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயா அணி வெற்றி பெற்றது 2 வது அணிக்கான ஆட்டத்தில் 2:1 என்ற கோல்கணக்கில் சென் பற்றிக்ஸ் வெற்றிபெற்றது 1 வது அணிக்கான ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

இந்த ஆட்டத்தின் நடுவர்களாக எஸ். சந்திரன், எம். பிரதீபன். கே. கோகிலன் ஆகியோர் கடமையாற்றினர். (உ-110)

## வாதரவத்தையில் பாலர் பகல் விடுதி

[கோப்பாய்]

புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வாதரவத்தை பகுதியில் பாலர் பகல் விடுதிஅமைப்பதற்காக நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டுள்ளதாக வலி கிழக்கு பிரதேசசபைத் தலைவர் பூ.குணசிங்கம்தெரிவித்தார்; இப் பகுதியூடாகச் செல்லும் வீதி திருத்தத்துக்கென அமைச்சு நிதியிலிருந்தும் 50 லட்சம்ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும்மேலும் அவர்தெரிவித்துள்ளார். (உ-79)

## பொலிஸாரால்
# தாக்கல் செய்யப்பட்ட 7 வழக்குகள் தள்ளுபடி

(மன்னார்)

மன்னார்நீதிமன்றில்பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட 7 வழக்குகளை மன்னார் மாவட்ட நீதிபதி எச். எம். அஜ்மீர் தள்ளுபடி செய்துள்ளார்.

இரண்டு பெண்கள் உட்பட 7 பேருக்கு எதிராக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்குகள் தொடர்பாக போதிய சான்றுகளையும் சாட்சிகளையும் சமர்ப்பிக்கத் தவறியதால் மேற்படி வழக்குகள் தள்ளுபடி செய்யப்படுவதாக நீதிவான்நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

இவ்வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் சிலர் இன்னும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-5

# வாழைகள் அழிவுக்கு 1000 ரூபா நட்டஈடு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் பயிர்ச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில இலகு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படும் என அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்;

கமநல சேவைகள திணைக்கள உயரதிகாரிகள் மற்றும் விவசாயிகளுடன்இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து சரசாலை மற்றும் வல்லிபுரக் குறிச்சி, கைதடி போன்ற பிரதேசங்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு தேவையான விதை நெல், உரவகைள் என்பன விநியோகம் செய்யவும், வயல் நிலங்களுக்கு பாதுகாப்பான கம்பிவேலிகள் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு சுமார் ஐந்து இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்து கமநல சேவைகள் திணைக்களம் ஊடாக வழங்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உரும்பிராய் நீர்வேலி. புத்தூர். கைதடி பிரதேசங்களில் வாழை அழிவுக்கான நட்டஈடாக சுமார் ஆயிரத்து 300 விவசாயிகளுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கவும நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர குறிகாட்டுவான் மன்னார் படகுச்சேவை ஆரம்பமானதும் முதற்கட்டமாக வெங்காயம், வாழைக்குலை போன்றவைஅனுப்ப ஏற்பாடு செய்வது எனவும், தினமும் சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான மரக்கறி வகைகள கொள்வனவு செய்யப்பட்டு அனுப்ப முடியும் எனவும் கமநல சேவைததிணைக்களத்தினர் இக் கலந்துரையடலில் தெரிவித்தனர். (உ)

## மோட்டார் சைக்கிள் திருட்டு

(கொழும்புத்துறை)

திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் வரும் பயணியை ஏற்றுவதற்காக காத்துநின்றவரின் மோட்டார் சைக்கிள் களவாடப் பட்டுள்ளது.

கடந்த வியாழனன்று யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைக் காரியாலயத்தின் முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளே திருட்டுப்போயுள்ளது; (உ-23)

## கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)

சிங்கப் பூரில் இருந்து சட்ட விரோதமாக இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட பதிரொன்றரைக் கிலோ தங்கம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துசுங்கத்திணைகள அதிகாரிகளினால் கைப் பற்றப்பட்டுள்ளது

கம்பஹா பகுதிபோலி முகவரிஒன்றுடன் வந்த பொதியினுள இருந்த இத்தங்கம் ஸ்கானிங் இயந்திரம் மூலம் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

## கள்வர் கத்திக்குத்து

(வரணி)

திருட்டு முயற்சிக்குத்தடையாய் இருந்த பெண்களை கத்தியால் குத்திக்காயப்படுத்திய சம்பவம் அண்மையில் கரணவாய் மூத்த விநாயகர் கோயில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சுப்பிரமணியம் பூரணம் என்பவரது வீட்டில் நள்ளிரவு வேளை கள்வர் ஓடு பிரித்து உள்ளே இறங்கியதைக்கண்ட அவ் வீட்டுப் பெண்கள் கூக்குரலிடவே அவர்களைக் கள்வர்கத்தியால்குத்திக் காயப்படுத்தி விட்டுத் தப்பியோடி விட்டதாக அறியப்படுகிறது; (உ-221)

## பேருந்துச் சேவையால்
# வ. பி. போ. சபைக்கு அதீத வருமானம்

(துன்னாலை)

வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர், சமுத்திர தீர்த்த படகுத் தீர்த்த தினங்களான கடந்த 1, 2, 3 ஆம் திகதிகளில் வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையால் நடாத்தப்பட்ட பேருந்துச் சேவையால் 4 இலட்சத்திற்கு மேல் வருமானம் ஈட்டப் பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைப் பொதுமுகாமையாளர் எஸ். மணிவாசகம், பருத்தித்துறை சாலை முகாமையாளர் எஸ். கமலநாதன் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் 30 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப பட்டதன் பேரில் மேற்படி வருமானம் பெறப் பட்டதாகவும்,

கடந்தகாலங்களை விடவும் இம் முறை உயர்வான வருமானம ஈட்டியதாகவும தெரிவிக்கப்பட்டது. (உ-41)

## திருநாள் திருப்பலி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயதிருநாட் திருப்பலியும், திருச்சொரூபப் பவனியும் இன்று இடம பெறவுள்ளது.

காலை7மணிக்கு திருநாட் திருப்பலியும் அதனைத்தொடந்து திருச்சொரூபப் பவனியும் இடம் பெறும்; (உ-233)

## முதியோர் தினம்

(யாழ்ப்பாணம்)

பளைப் பிரதேச செயலக முதியோர் தினம் நாளை காலை 10மணியளவில்புலோலியில் இயங்கும் பளை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேசசெயலர் தலைமையில் நடைபெறவுளளது.

இந் நிகழ்வில் ஆர்.ஆர். ஏ என் அமைபபின் பொறியியலாளர் திரு ப,கிரிதரன் பிரதமவிருந்தினராகவும், வைத்திய கலாநிதி எஸ் மயிலேறும் பெருமாள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொளவார்கள். முதியோர் வாரத்தை யொட்டி நடத்தப்பட்ட பளை பிரதேச பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்படும் இந் நிழ்வில் 36முதியோர்கள கௌரவிக்கப்படுவார்கள். [எ]

## சிந்தனைக்கு விருந்து

### காற்றாய்ப் பறந்தான்

தங்கையினைக் கேலிபல தன்முன்செய் தானென்றே
அங்கவளின் அண்ணன் ஏச்சாற்றாது பொங்கியெழும
சீற்றத்து டன்கூட்டம் சேர்த்துவந் தேயடித்துக்
காற்றாய்ப் பறந்தனன் காண்.

'பழையவன்'

# சிறையிலிருந்த சகா நீதிமன்றினால் விடுதலை

(சென்னை)

சிதம்பரம்ராஜாமுத்தையா மருத்துவக் கல்லூரி மாணவன் நாவரசன் கொலைக் குற்றத்தில் சிறையிருந்த ஜோன் டேவிற்றை விடுதலை செய்யும்படி சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஜோன் டேவிற்றிற்கு ஆயுள் சிறைத்தண்டனையை கடலூர் நீதிமன்றம் வழங்கியதையடுத்து, அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடுசெய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கினை சென்னை உயர்நீதிமன்றில் ஆர். பாலசுப்பிரமணியம் விபத்தவச்சலம் ஆகிய நீதிபதிகள் விசாரித்துத் தீர்ப்பளிக்கையில், குற்றம் சாட்டப்பட்ட ஜோன் டேவிற் இந்தக் கொலைக்குற்றத்தை செய்தார் என்பதற்கு அரசதரப்பு வக்கீல்கள் கொடுத்த சான்று வாதங்கள் திருப்திகரமாக இல்லையென்றும்,

இது குற்றத்தை நிருபிக்கப் போதுமானதாக இல்லையென்றும் தெரிவித்தனர்.

கல்லூரி விடுதியில் நாவரசன் கொலை செய்யப்பட்டு தலை, கை, கால்கள் துண்டிக்கப்பட்டு சூட்கேசில் எடுத்துச் செல்லப்பட்டவிடயம் விடுதியில் உள்ள எந்த மாணவனுக்கும் தெரியாது இருந்தமை நம்பும்படியாக இல்லைஎன்று சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர். (து)

## மாநிலங்களில் பயங்கரவாதம்

# விழிப்பாக இருக்கவேண்டும் அத்வானி எச்சரிக்கை

(புதுடில்லி)

அனைத்து மாநிலங்களிலும் பயங்கரவாதம் தலைதூக்க இருப்பதால் மக்கள் விழிப்புடன்இருக்கவேண்டும் என்று உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் மாநிலச் செயலாளர்கள் விசேட பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் பயங்கரவாதம் அல்லது திட்டமிடப்பட்ட செயல்களைச் சமாளிக்க மத்தியசட்ட அமுலாக்கல் ஏஜன்சி ஒன்றை அரசு அமைக்க இருப்பதை மாநிலங்கள்ஏற்கவேண்டும் என்று கூறினார்.

அமெரிக்க நகரங்கள் பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கையென்றும் இது இந்தியாவிற்கு நல்லதொரு பாடமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-து)

## பாகிஸ்தானுக்கான

# இலங்கைகிரிக்கெட்அணியின் சுற்றுப் பயணம் ரத்து

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானுக்கு குறுகிய கால விஜயம் மேற்கொண்டு ஒரு நாள் போட்டிகளில் விளையாட இருந்த இலங்கை அணியின் சுற்றுப் பயணம் ரத்து செய்யப்படுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட்கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இப் போட்டியை பாகிஸ்தான்கிரிக்கெட்கட்டுப்பாட்டுச்சபை ரத்து செய்துள்ளது.

முன்னர் ஒரு நாள் போட்டிகளில் விளையாட வருமாறு இலங்கை அணியை பாகிஸ்தான் அழைத்தமையும் அந்த அழைப்பை இலங்கை ஏற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ2-)

# தென்னாபிரிக்க அணி வென்றது

(டர்பன்)

தென்னாபிரிக்காவில் ஜொகானிஸ் பேர்க் நகரில் நேற்று முன்தினம் இந்திய தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையே நடைபெற்ற முதலாவது சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 5 விக்கெட் இழப்பிற்கு 279 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சச்சின் டெண்டுல்கர் 101 ஓட்டங்களும், கங்குலி 127 ஓட்டங்களும் எடுத்து சதம் அடித்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 48.2 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் ஹரிகேஸ்டன் ஆட்டமிழக்காமல் 133 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

# பின்லேடனைப் பிடிக்க அமெரிக்க ரஷ்ய படைகள்

## கூட்டு நடவடிக்கை

(இஸ்லாமாபாத்)

ஒஸாமாபின் லேடனையும் அவரது கூட்டாளிகளையும் கண்டுபிடிக்கும் முகமாக அமெரிக்க, ரஷ்ய துருப்புக்கள் கூட்டு இராணுவ நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக பாகிஸ்தான் அரசசார்புஊடகமான நியூஇன்ர நாஷனல் நாளேடு தகவல்வெளியிட்டுள்ளது.

ஆப்கானின்பாமிர்மலைப் பகுதியில் ஒளிந்துகொண்டிருக்கும்பின்லேடனையும் அவரதுகூட்டாளிகளை யும்தேடிப் பிடிக்கும்முகமாக அங்கு சென்றிருக்கும்அமெரிக்க அதிரடிப் படையினருடன் இவர்கள் இணைந்துள்ளனர்.

அமெரிக்கபடைகளுக்குத் தேவையான வழிகாட்டும் வரை படங்களை யும்ரஷ்யா கொடுத்துதவியிருப்பதாகஅந் நாளேடு மேலும் தெரிவித்துள்ளது. (எ-4)

# ஆப்கானுக்கு நிவாரணப் பொருள்கள்

ஆப்கானிஸ்தானில் குளிர் காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் அங்கு நிவாரணப் பொருட்கள் உணவு முதலியன கொண்டுபோய்சேர்க்கப்பட வேண்டும் என்றும் அல்லாவிடின் ஆப்கானில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறக்க நேரிடலாம் என்றும் அனைத்துலக நிவாரண அமைப்புகள் எச்சரித்துள்ளன.

குளிர்காலம் ஆரம்பிக்கப்பட்டால் பனியினால் பல்வேறு பாதைகள் அடைக்கப்படும் இதனால் நிவாரணப் பொருட்களை ஆப்கானுள் கொண்டு செல்வது சிரமம் என்றும், நிவாரண உதவிகளை விரைவாகச் செய்ய தலிபான் கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும் என்றும் உதவி அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இன்னும் சிறிது காலத்தினுள் ஆப்கானில் குளிர்காலம் ஆரம்பமாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பேகம்கலிதாசியா நாளை பதவி ஏற்பார்

(டாக்கா)

பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற தேசியவாதக்கட்சிகூட்டமைப்பின் தலைவி பேகம் கலிதாசியா புதிய பிரதமராக நாளை பதவி ஏற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. நடந்த தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை காலிதாசியா பெற்றுள்ளார்.

ஆயினும் இத்தேர்தலில் மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக பதவி விலகிய பிரதமரும் அவாமிலி லீக் கட்சி தலைவருமான சேகி ஹசினா குற்றம் சாட்டி உள்ளார். தேர்தலில் வெற்றி பெற்ற அவாமிலிலீக் கட்சியின் உறுப்பினர்கள் பதவி ஏற்க மறுத்துவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

# பாதுகாப்பை பலப்படுத்த ஐ. நாவிடம் கோரிக்கை

(லண்டன்)

உலகளாவிய ரீதியில் விமான நிலையங்களின் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் விமான போக்கு வரத்து சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களை அடுத்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

187 நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடிய 33 ஆவது சர்வதேச மாநாட்டிலேயே இத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனடிப்படையில், விமான நிலைய பாதுகாப்பு அதிகரிக்கப்படும் என்று மேலும் விமானியின் அறைக் கதவிற்கு கூடிய பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

# ஆப்கான் மீதான போரை தவிர்க்கப் பரிந்துரை

(கட்டார்)

அமெரிக்கா மீதான தாக்குதலிற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்காவும் அதனது நேச நாடுகளும் ஆப்கான் மீது போர் நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது என சவுதி அரேபியாவின் சிரேஷ்ட மதத்தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மெக்காவில் உள்ள பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற தொழுகையின் போது, பிரசங்கம் செய்த அப்துல்லாவின் கமீன், கலாசாரம் மதங்கள் மற்றும் இனங்களுக்கிடையே பேதங்களை தோற்றுவிக்க கூடிய கொள்கைகளை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இத்தகைய செயல்களை அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் கைவிடவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (உ-2)




# ஆப்கான் பொறியில் சிக்கிக் கொண்டது

## ரொனி பிளேயர் கூறுகிறார்

(இஸ்லாமபாத்)

ஆப்கானிஸ்தானைச் சுற்றி பொறி வைக்கப்பட்டுளளதாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார். இராஜதந்திரம் ஆப்கானுக்கான உதவி, இராணுவ பலம் என்பன ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதனால் ஆப்கான் பொறியில் சிக்கி உள்ளதாக பாகிஸ்தான் வந்திருந்த ரொனி பிளேயர் செய்தியாளரிடம் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

ஆப்கானில் தலிபான் அரசு வீழ்ச்சியடையும் போது சகல ஆப்கான் மக்களையும் உள்ளடக்கிய மிக பரவலான அடிப்படை உடைய அரசாங்கம் ஏற்படுத்தப்படவேண்டும் என்றும், ஆப்கான் மக்களுக்கு உறுதியானதும் நிலையானதுமான எதிர்காலம் கிடைக்க வேண்டும் என்றும் பிளேயர் கூறியுள்ளார். இதேவேளை பிரிட்டன் எதிர்பார்த்ததை விட ரஷ்யா கூடுதல் உதவி வழங்க அதிபர் புடின் முன்வந்துள்ளதாகவும் தெரிவித்தார். ரஷ்யா உளவுத் தகவல்களை வழங்குவதில் மட்டுமின்றி, தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளிலும் உதவி வழங்க முன்வந்துள்ளதாகவும் பிளேயர் தெரிவித்தார். (எ-2)

# இராசி பலன்

(07-10-2001)
(புரட்டாதி 21 ஞாயிறு)
பஞ்சமி மு:இ 9.42 வரை
றோகினி பி.இ 3 22 வரை
இராகு 4 32-6.02
நல்லநேரம் 9.02-10.32
சித்தம்

**மேடம்**

தனவிரயம், வீண் வார்த்தை, நண்பர்கள் வெறுப்பு, காரிய அனுகூலம்.

**இடபம்**

குழப்பமான நிலை, போசன சுகம் வாக்குப்பலிதம், காரியம் கைகூடும்.

**மிதுனம்**

சயன சுகக் குறைவு, பிரயாணம், கோபப்படுதல் முயற்சி தாமதம்.

**கடகம்**

சகோதரர் உதவி. குடும்ப சுகம், சுபகாரியம் நல்ல செய்தி.

**சிங்கம்**

அதிக பிரயாசை, பிறர் உதவி, அதிகாரம், முயற்சி கைகூடும்.

**கன்னி**

உடலுழைப்பு, மனச் சஞ்சலம், திட்டமிடல், விரோதம்.

**துலாம்**

பிரயாண கஷ்டம், உறவினர் வெறுப்பு, காரிய தாமதம், சொத்துப் பிணக்கு.

**விருச்சிகம்**

சுவாரஷ்யம், நல்ல வரவேற்பு காரிய நன்மை, நண்பர்கள் உதவி.

**தனுசு**

தொழில் சிறப்பு, சத்துரு ஜெயம், சந்தோஷம், காரிய அனுகூலம்.

**மகரம்**

குடும்பக் கவலை, வியாதி, புதிய மாற்றம் தனவிரயம்.

**கும்பம்**

ரோகபயம், திடீர் நன்மை. காரிய தாமதம் மனச் சஞ்லம்.

**மீனம்**

தனலாபம், களியாட்டம், கூட்டு முயற்சி வாக்கு மேன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்


## நன்றே காண்பாய் நாளும் சாந்தி!

மக்கள் பணியே மகேசன் பணியாய்
ஆற்றி மறைந்த அமரர்

## கந்தையா திருநாவுக்கரசு

அவர்களுக்கு எம் கண்ணீர்க் காணிக்கை

கோழைகளாகிக் கொடுமைகள் கண்ட
ஏழைகள் வாழ்வில் ஏற்றம் காட்டி
தாழ்வது காணுந் தமிழர் தரணி
ஆள்வது காணும் ஆவலினோடு
சங்கடம் வரினும் தழைத்திடாது
புங்குடு தீவு பொலிவுகள் காணச்
சங்கம் வைத்தபி விருத்தி செய்தாய்
எங்கள் உயிராய் உறவாய் உணர்வாய்
என்றும் கலந்த நாவுக் கரசே
சென்றே ஈசன் திருவடிக் கீழே
உன்றன் குருவின் உடனிருந் தென்றும்
நன்றே காண்பாய் நாளும் சாந்தி!

தாவடியூர்
கே. எஸ். ஆர். திருஞானசம்பந்தன்
அருளிசையரசு
பிரார்த்தனையுடன்
க. திருலோகநாதன்
ஸ்ரீசக்தி ஸ்ரோர்ஸ்
310 A, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
(2686)

எய்தற்(கு) அரிய(து) இயைந்
தக்கால்
அந்நிலையே செய்தற்(கு)
அரிய செயல்
குறள்

# வலம்புரி

## இனவெறி கொண்ட ஜே. வி. பி.

இலங்கையின் இன விவகாரத்தில் நோர்வே மேற்கொண்ட சமாதான முயற்சியை தடுத்து நிறுத்தியது தாமே என ஜே.வி. பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச மார் தட்டியுள்ளார்.

யுத்தத்தின் கொடூரத்தைத் தாங்க முடியாத மக்கள் வேதனைப்பட ஜே. வி. பியினர் சமாதானமுயற்சியைத் தடுத்து நிறுத்தியது மட்டுமன்றி அதனைப் பகிரங்கமாகக் கூறிப் பெருமைப்பட்டும் கொள்கின்றனர்.

நாடுஎரிந்துகொண்டிருந்த போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்ததைக் கூட அனுமதிக்கலாம். ஆனால் ஜே. வி. பியின் அநாகரிகமான நாட்டிற்கு அழிவைத் தரும் செயலை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. அனுமதிக்கவும் கூடாது.

நாட்டைப் பீடித்துள்ள யுத்தத்தால் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் பாதிப்படைந்துள்ளனர். படையில் சேர்ந்த ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் அரசியல் வாதிகளின் பகட்டு வாழ்வுக்காகத் தம்முயிரைப் பலியாக்கியுள்ளனர்.

உயிரிழந்த, காணாமல் போன படையினரின் பெற்றோர் விடுதலைப் புலிகளுடன் பேசி இனப் பிரச்சினைக்கு உடன் தீர்வுகாண வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் நோர்வேயின் சமாதான முயற்சியைத் தாமே தடுத்து நிறுத்தியதாக ஜே. வி. பி கூறுமாயின் அக்கட்சியின் கொள்கை - கோட்பாடு எத்தகைய தென்பதை சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேவேளை நாட்டில் சமாதானத்தை விரும்பாத இனவெறி கொண்ட கட்சிகளைச் சிங்கள மக்கள் இனங் கண்டுகொள்வதும் மிக மிக அவசிய மாகும்.

இலங்கை மண்ணில் சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டின் சுபீட்சத்திற்கும் சக வாழ்வுக்கும் வழிவகுக்கும் நோக்குடன் நோர்வே மேற்கொண்ட சமாதானப் பணியை தாமேநிறுத்திய தாக அறிவித்த ஜே. வி. பியுடன் உறவுகொண்டுள்ள ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியால் இனப் பிரச்சினைக்கு எங்ஙனம் தீர்வு காண முடியும் என்பது கேள்விக்குறியே.

---

பரமபிதா காட்டிய பாதை

# இதயத்திலிருந்தே தீய எண்ணங்கள் தோன்றி

# தூய்மையான வாழ்வை மாசுபடுத்துகின்றன



ஒருநாள்பரிசேயரும் ஜெருசலேமிலிருந்து வந்திருந்த வேதபாரகர் சிலரும் யேசு இருந்த இடத்தில் வந்து கூடினார்கள். அவர்கள் யேசுவின் சீடருள் சிலர் தீட்டான அதாவது கழுவாத கைகளால் சாப்பிடுவதைக்கண்டார்கள்: பரிசேயரும் மற்றெல்லா யூதரும் முன்னோரின் பரம்பரைவழக்கத்தைப்பின்பற்றி, கைகளை முறைப்படி கழுவாமல் சாப்பிடுவதில்லை. கடையிலிருந்து கொண்டு வந்ததையும் ஆசாரப்படி கழுவாமல் சாப்பிடுவதில்லை. ஆசாரப்படி ஸ்நானம்செய்யாமல், சாப்பிடுவதில்லை. அப்படியே கிண்ணங்கள், ஜாடிகள், செப்புக் குடங்களையும் கழுவுவார்கள். இவை தவிரப் பரம்பரையின்படி கைக்கொள்ளப் படவேண்டியவை இன்னும் பல இருந்தன.

### போலி பக்தர்கள்

ஆகவே, பரிசேயரும், வேத பாரகரும் அவரிடம் ''உம்முடைய சீஷர் நம்முன்னோர் பரம்பரை வழக்கப்படிநடவாமல் தீட்டான கையால் சாப்பிடுவதேன்'? என்றுகேட்டார்கள். அவர் அவர்களிடம் ''போலி பக்தர்களாகிய உங்களைக் குறித்து ஏசாயா சரியாய் தீர்க்க தரிசனம் உரைத்திருக்கிறார். அதாவது ''இந்த மக்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனப்படுத்துகிறார்கள்; ஆனால் அவர்களின் இருதயத்திற்கும், எனக்குமோ வெகுதூரம். மனிதனுடைய கட்டளைகளை ஞான போதனையாகப் போதிக்கிறார்கள். ஆகையால், அவர்கள் என்னை ஆராதிப்பது வீண், என்று எழுதப்பட்டிருக்கிறது. நீங்கள் கடவுளின் கட்டளைகளைக் கைவிட்டு, மனித பரம்பரையைக் கைக்கொண்டு வருகிறீர்கள் என்றார்; மேலும் அவர்களிடம் உங்கள் பரம்பரையை கைக்கொள்ள வேண்டும்'', நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக கடவுளின் கட்டளைகளை எவ்வளவு நன்றாக ஒதுக்கி விட்டீர்கள்.

### தந்தை, தாய் பேண்

எவ்வாறெனில், உன் தகப்பனையும், உன் தாயையும் கனப்படுத்த வேண்டும் என்றும், தகப்பனையாவது, தாயையாவது நிந்திக்கிறவன் சாகவே சாவானாக என்றும் மோசேசொல்லியிருக்கிறான்; ஆனால் நீங்களோ ஒருவன் தன் தகப்பனையாவது, தாயையாவது பார்த்து, உமக்கு உதவியாக என்னால் கொடுக்கக்கூடியதை கொடுப்பான்'' நேர்ந்து கொண்ட காணிக்கையாக ஆக்கிவிட்டேன்'' என்று சொல்லி விடுவானானால், அதன் பிறகு அவன் தன் தகப்பனுக்கோ, தாய்க்கோ எந்த உதவியையும் செய்ய வேண்டியதில்லை என்று சொல்லி அவனைத் தடுத்து விடுகிறீர்கள். வழிவழியாக நீங்கள் போதித்து வந்த இந்தப் பரம்பரையின் மூலம் கடவுளின் வார்த்தையைப் பயனற்ற தாக்கி விட்டீர்கள்; நீங்கள் செய்கின்ற வேறு பல காரியங்களும் இப்படியே இருக்கின்றதா'' என்று சொன்னார்;

### தீட்டு

பிறகு அவர் ஜனகூட்டத்தை மறுபடியும் தம்மிடம் அழைத்து அவர்களை நோக்கி, ''நீங்கள் எல்லாரும் நான் சொல்வதை நன்றாகக் கவனித்துப் புரிந்துகொள்ளுங்கள். வெளியேயிருந்து மனிதனுக்குள்ளேசென்று அவனைத் தீட்டுப்படுத்தக் கூடியதுஎதுவுமில்லை. மனிதனுக்குள்ளிருந்து வெளிவருகிறவையே அவனைத் தீட்டுப்படுத்தும்'' என்றார். அவர் ஜனக்கூட்டத்தை விட்டு வீட்டிற்குள் வந்தபோது, அவருடைய சீஷர் அவரிடம் இந்த உவமை பற்றிக் கேட்க, அவர் ''நீங்களும் இந்த அளவிற்கு மந்த புத்தியுள்ளவர்களாய் இருக்கிறீர்களா? வெளியேயிருந்து மனிதனுக்குள்ளே செல்லும் எதுவும் அவனைத் தீட்டுப்படுத்த முடியாது. ஏனென்றால், அது அவனுடைய இதயத்திற்குள் நுழையாமல் வயிற்றில் சென்று வெளியே கழிந்து போகும்; இதை நீங்கள் உணரவில்லையா? என்றார். இப்படிச் சொன்னதால் அவர் எல்லா உணவுப் பொருட்களையும் சுத்தமானதாக்கி விட்டார். அவர் மேலும் அவர்களிடம் ''மனிதனுக்குள்ளிருந்து வெளியே வருவதுதான் அவனைத் தீட்டுப்படுத்தும். ஏனெனில் மனிதருடைய இருதயத்திலிருந்தே, தீயஎண்ணங்கள், அவை விளைவிக்கும். வேசித்தனம், களவு, கொலை, விபசாரம், பேராசை, பொல்லாங்கு, கபடு, காமம், பொறாமை, தேவதூஷணம், மதிகேடு ஆகியவை வெளிவரும். பொல்லாங்கான இவையெல்லாம் உள்ளத்திலிருந்து வெளிவந்து மனிதனைத் தீட்டுப்படுத்தும்' என்றார். □

- மாற்கு

---

சோதிட பலன்

# 'செவ்வாய் குற்றம்' ஒதுக்க வேண்டியதில்லை

# நுணுகி ஆராய்ந்து பொருத்தம் காணலாம்

சோதிடத்தில் நம் முன்னோர்கள் அதிக நம்பிக்கையும் மதிப்பும் கொண்டு அதில் ஈடுபட்டுள்ளமை யாவரும் அறிந்ததே: இந்த பூமியில் வாழும் உயிர்கள் அனைத்துக்கும ஏதோ நன்மை, தீமைகள் நடக்கும். என்பதை நாம் அறிந்துள்ளோம். கிரக ஜோதிடத்தில் பதினொரு கிரகங்கள் இருக்கின்றன . இதில் ஒன்பது கிரகங்களின் பார்வையே பூமியில் வாழும் உயிர்கள் மீது கதிர் வீழ்ச்சுகள் படுகின்றதாக விஞ்ஞானிகள் மூலம அறிகின்றோம. அதன் படி ஒரு ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் இருந்தால் பயம் கொள்கின்றார்கள்; அது உண்மை .ஆனால் ஏன் என்ன காரணம் செவ்வாய் தோஷம் உள்ளவர்களுக்கு. உணர்ச்சிகள் அதிகம்இருக்கும் அதனால் செவ்வாய் தோஷம இல்லாதவர்களை தாக்கும் என்பது ஒரு கருத்து. கோபம் அதிகம் இருக்கும். அதனால் குடும்பத்தில் தாக்கம், இருக்கும் என்பது நியதி. ஆகவே செவ்வாய் தோஷம் உள்ள ஜாதகங்களை ஒதுக்கி விடாதீர்கள். அதற்குரிய மாற்று வழிகளும் உண்டு.

### 7 இல் செவ்வாய்

ஒரு பெண்ணிற்கு 7ல் செவ்வாய் இருந்தால் ஆணுக்கும் இருக்க வேண்டும் என்பது இல்லை. மற்றும் இடங்களில் இருந்தாலும் ஒரு பாவம் எனக் கொள்ள முடியும். அதாவது ஆண் இடபலக்கினத்திலோ, துலாம்லக்கினத்திலோ பிறந்து இருந்தால் அவருக்கும் ஆதிபத்திய செவ்வாய் தோஷம் உண்டு; அதே போல் செவ்வாய் உணர்ச்சிக்கும் உரியவன் என்றால், வெள்ளியும் இன்ப இச்சைக்கு உரியவன் தான். ஆகவே பெண்ணுக்கு செவ்வாய் தோஷம் இருந்து ஆட்சி உச்சம் வியாழனால் பார்க்கப்பட்டு இருந்தாலும், அது தோஷம் என்பதற்கு இடம் இல்லை. அப்படி இல்லை என்றால். ஆண் மேற்குறிப்பிட்ட லக்கினத்தில பிறந்து இருப்பின் 7ல் செவ்வாய் உள பெண்ணுக்கு எவ்வித பயம் இல்லாமல் விவாகம் செய்யலாம்; அல்லது அந்த ஆண் ஜாதகத்தில் 1, 4, 7, 10 ஆம் இடங்களில் வெள்ளி இருந்தால் எவ்வித பயமும் இன்றி விவாகம் செய்யலாம்.

### சஞ்சலம்

கடகம், சிங்கம் லக்கினத்தில் பிறப்பவர்களுக்கும் 7ம் இடத்தில் சனி இருப்பவர்கட்கும் தான் குடும்ப வாழ்க்கையில் சஞ்சலம் உருவாகும்; பாதிப்புக்கள் உருவாகும்என்பதை கண்ணோட்டம் விட்டுப் பாருங்கள், அதே போல் 29, 30, 31, 32 பிறப்பு எண்ணோ கூட்டு எண்ணோ இருந்தால் இவர்களுக்கும் குடும்பவாழ்வு சஞ்சலத்திற்குரிய இடம் தான், பொதுவாக 4,5, 7, 16, 17, 19, 28 ஆம் திகதிகளில் பிறப்பவர்களுக்கும் குடும்ப வாழ்வு பாதிப்புக்கள் சஞ்சலம் தாக்கம் விவாக வாழ்வு அமைவது தடைகள், தாமதங்கள் உருவாகும் என்பதை அறிந்து பாருங்கள். எனவே செவ்வாய் தோஷம் என்பதற்கு மட்டும் எடுத்து ஜாதகங்களை ஒதுக்கி விடாதீர்கள் ஆராய்ந்து பாருங்கள். □

சோதிடர் பொ. கஜேந்திரன்
[நயினை]

---

## தினசரி தியானம்

## நிலைத்த உறவு

என்பெற்ற தாயாரும் என்னைப்
பிணமென்று இகழ்ந்துவிட்டார்
பொன் பெற்ற மாதரும் போவென்று
சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன் பெற்ற மைந்தரும் பின்வலம்
வந்து குடமுடைத்தார்
உன்பற்றொழிய வொருபற்றும்
இல்லை உடையவனே.

-பட்டினத்தார்

போற்றுதற்கும், சார்ந்திருப்பதற்கும் நின்னையல்லால் வேறு நட்பு யாரையும் யான் அறிந்திலேன்,

உற்றார், உறவினர் என்பார் எல்லாரும் அவரவர் வினையை முடிக்க இவ்வையகத்தில் வந்துளர். அப்படி வருவதும், போவதும் தனித்தனியே நிகழ்கின்றன. ஒருவருக்காக இன்னொருவர் தனது போக்கு வரவை மாற்றுவதில்லை; ஆதலால் இவர்கள் நிலைத்த உறவினர் ஆகார்; கடவுள் ஒருவரே நிலைத்த உறவு ஆகிறார்;

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## கனடா விலும் அஞ்சலிக்கூட்டம்

(ஒட்டவா)

ஒட்டிசுட்டானில் கடந்த மாதம் 26ம் திகதி இளைமோர்த் தாக்குதலில் வீரச்சாவெய்திய புலிகளின் மூத்த தலைவரான கேணல்சங்ருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கனடாவில் வீர வணக்ககூட்டமொன்று இடம் பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை உலகத்தமிழர் இயக்கம் மேற்கொண்டுள்ளது. (ந-4)

## புலிகள் தரப்பில் சேதமில்லை

(வவுனியா)

முல்லைக் கடலில் நேற்று முன்தினம் கடற்படையினருடன் இடம் பெற்றமோதலில் கடற்படையினரின் டோறாப் பீரங்கிப்படகு சேதமடைந்ததாகவும் இத் தாக்குதலின் போது புலிகள் தரப்பிலெந்த வித சேதமும் ஏற்படவில்லையென புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. (ந)

# இலங்கையின் இன யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் காலம் நெருங்கிவிட்டது

### ஜப்பானியத் தூதுவர் சிச்சீனே ஒற்ஸ்சுகா தெரிவித்தார்

(நிலாவெளியிலிருந்து எம்.கே. ஜீவதாஸ்)

இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் யுத்தத்தினால் நாடு அல்லோகல்லோலப்பட்டு நிற்கிறது இங்கு நடைபெற்றுவரும் இக்கொடிய யுத்தம் உடன் நிறுத்தப்பட வேண்டுமென அனைவரும் ஒருமித்த குரலில் எடுத்துக் கூற வேண்டிய காலம் நெருங்கி விட்டது என்று இலங்கையிலுள்ள ஜப்பானிய தூதுவர் சிச்சீனே ஒற்ஸ்சுகா கூறியுள்ளார்.

நிலாவெளியில் நேற்று நடைபெற்ற சமாதானமாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இம் மாநாட்டில் நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் சுமார் 118 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதில் இந்தியா, நோர்வே, ஜேர்மன், ஜப்பான் மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தூதுவர்களும் கலந்து கொண்டனர்.

ஜப்பான் தூதுவர் உரையாற்றுகையில்;

நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வரும் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு சமாதானம் ஏற்படுத்தப்பட்டால் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் அனைத்துப் புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தேவைப்படும் நிதிவசதிகளை பெருமளவில் வழங்குவதற்கு ஜப்பான் என்றும் தயாராகவே உள்ளது அத்துடன் இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் முக்கிய நாடாகத் தொடர்ந்தும் ஜப்பான் இருந்து வரும் என்றும் கூறினார்.

இம் மாநாட்டில் பங்கு கொண்ட யாழ். பல்கலைக் கழகமாணவர் ஒன்றியத்தலைவர் செ.கஜேந்திரன் அங்கு உரையாற்றுகையில்

கடந்த இருபது வருடங்களாக இடம்பெற்று வருகின்ற யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவர தென்பகுதி சமாதான செயற்பாட்டாளர்கள் இப்போது முனைப்புடன் செயற்படுவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

யாழ்ப்பாணத்தில் பொங்கு தமிழ் எழுச்சித்திட்டத்தினை நாம் ஏற்படுத்தி மக்களின் அபிலாசைகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தினோம் இதனைக்கண்டு சீற்றமடைந்த ஆட்சியாளர்கள் எமக்கு புலி முத்திரை குத்தினார்கள் நாம் தமிழ் மக்களின் உணர்வுகளான சுயநிர்ணயஉரிமை, சுயாட்சி, சுய அடையாளம் என்பவற்றையே கோரி நிற்கின்றனர் என்பதை வெளிப்படுத்தினோம்.

புலிகளின் பங்களிப்பற்ற எந்தவொரு சமாதானப் பேச்சுவார்த்தையும் எந்த வகையிலும் உதவப் போவதில்லை என்பதை இங்கு திட்ட வட்டமாகத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு நீக்குவதற்கு எமது மத்தியில் சமூகமளித்துள்ள இந்திய தூதுவராலயப் பிரதிநிதிமுன்வரல் வேண்டும்என்ற கோரிக்கையை பகிரங்கமாக விடுக்கின்றேன் என்றும் கூறினார். (உ-77)

# அமெரிக்காவின் பயங்கரவாத பட்டியலில் 26 அமைப்புகள்

(வாஷிங்டன்)

அமெரிக்கஅரசாங்கம் பயங்கரவாதக் குழுக்களெனக் கருதும் 26 அமைப்புக்களின் பெயர் விபரங்களை நேற்று முன்தினமிரவு வெளியிட்டுள்ளது.

அமெரிக்க நகரங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் வெளியிடப்பட்டுள்ள இப்பெயர்ப் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக இந்திய ஜவர்கலால்நேரு பல்கலைக் கழகத்தின் தெற்காசியப் பிரிவுக்குப் பொறுப்பான பேராசிரியர் பொன்மணி சகாதேவன் கருத்து தெரிவிக்கையில்:

அமெரிக்க அரசாங்கம் ஏற்கனவே வெளியிட்ட பயங்கரவாத அமைப்புக்களின் பெயர்ப்பட்டியலில் விடுதலைப்புலிகள் அமைப்பும் சேர்க்கப்பட்டுள்ளதால் அவர்களுக்குப் பாரிய தாக்கம் எதனையும் ஏற்படுத்தப்போவதில்லை.

ஆனால் அமெரிக்காமீதுநடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் பயங்கரவாதம் ஒழிக்கப்படவேண்டுமென சர்தேச சமூகம்ஒன்றுபட்டு நிற்கையில் இவ்வாறான குழுக்கள் உடனடியாகத் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட முடியாது.

அவ்வாறு தாக்குதல்நடவடிக்கையில் ஈடுபடுவார்களாயின் சர்வதேச சமூகத்தின் அதிருப்தி அவர்கள் மீது திரும்பும். எனவே அவர்கள்இவ்வாறான தாக்குதல்களில் உடனடியாக ஈடுபடும் சாத்தியம் குறைவாகவே இருக்கும் என்றார்.

இதேவேளை காஷ்மீர் தீவிரவாதிகளான லக்ஸறி இதொய்பா மற்றும் செய்முகமது போன்ற பயங்கரவாத அமைப்புக்களின் பெயர்கள் மேற்படி பட்டியலில் இடம் பெறாமை குறித்து இந்திய அரசு ஏமாற்றமும் விரக்தியும் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த
சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும்
விஷேசமாக தயாரிக்கப்பட்டது.
சுத்தமான
வி.எஸ்.பி, நல்லெண்ணெய்
தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(கி/1986)

## உலக ஆசிரியர் தின விழா

உலக ஆசிரியர் தின விழாவை ஒட்டி யா/ நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலய மாணவர் மன்றத்தினால் நேற்று 06.10.2001 சனிக்கிழமை பி. ப 2.30 மணியளவில் பாடசாலையின் மாணவர் மன்றத் தலைவர் செல்வன் சு. லோகேஸ்வரன் தலைமையில் ஆசிரியர் தின விழா நடைபெற்றது. இவ் விழாவிற்கு

பிரதம விருந்தினர்களாக

உயர் திரு ஜி. வி. இராதாகிருஷ்ணன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் தீவகம்) அவர்களும்

உயர் திரு சோ. தில்லைநாதன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர் வேலணை) அவர்களும்

திரு க. கணேஸ்வரன் (அதிபர் ஸ்ரீ க. க. ம. வி)

அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். ஆசிரியர் தின நன்நாளில் ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறோம்.

மாணவர் மன்றம்
ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்

பிரசுர அன்பளிப்பு;-
தர்ஷி ஒடியோ அன் போட்டோ
8-ம் வட்டாரம் - நயினாதீவு.
(கி- 2688)

## சிப்பாய் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் பகுதியில் நிலை கொண்டுள்ள 233வது படைப்பிரிவின் தலைமையக முன்னணிக் காவலரண் மீது நேற்றுமுன்தினமிரவு 11மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய கிரனைட் தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தை அடுத்து மறுநாள்காலை முதல்மாலை வரை படையினர் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடத்தினர். (5)

மனித

தமக்குதரப்படும் உத்தரவுகளை கண்டிப்புடன் நிறைவேற்றும் அதேவேளை மனித உரிமைகள் மீறப்படாமலிருப்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

குறித்த ஒரு நபர் கைது செய்யப்பட்டமை துன்புறுத்தப்பட்டமை சித்திரவதை செய்யப்பட்டமை நீதிமன்றத்திற்குபாரப்படுத்தப்பட்டமை பற்றிய விபரங்கள் யாவும் பதிவு செய்யப் பட்டிருத்தல் வேண்டும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

120 அதிகாரிகள் கலந்து கொண்ட இக் கருத்தரங்கில் பேராசிரியர் லக்சிறி பெர்னாண்டோ, கேர்ணல் எம். ஏ எம் பீரிஸ், பிரிகேடியர் பி. பன்னிப்பிட்டிய ஆகியோரும் உரையாற்றினர். (ந)

ஆளும்கட்சி

டுள்ள அமைச்சர்களின் ஆதரவு இறுதி நேரத்தில் கிடைக்கலாமென்றஎதிர்பார்ப்புடன் எதிர்க்கட்சிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

9ம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் கூடும் போது நம்பிக்கைஇல்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரவுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அரசதரப்பில் இருந்து முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்கா ஜி.எல்.பீரிஸ், மகிந்தவி ஜயசேகரா உட்பட எட்டு எம்.பிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும் போது அதில் அரசு தோற்கும் அறிகுறி தென்படுமானால் வாக்கெடுப்பைநிறுத்தி தனது விசேட அதிகாரத்தின் மூலம் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கான அறிவிப்பை ஜனாதிபதி விடுப்பார் என்றும் தெரியவருகிறது; (வ)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் இருந்துயாழ்ப்பாணம் வந்துள்ள சேக்கிழார் அடிப்பொடி தில்லைஸ்தானம் நடராஜன், இராமச்சந்திரன் இன்று பி.பகல் 4.30 மணிக்கு நல்லூர் சிவன் கோவிலில் 'அருட்பெரும் சோதி' என்னும் தலைப்பில்சொற்பொழிவாற்றவுள்ளார்.

முன்னதாக இன்று காலை 8 மணிமுதல் நாவலர் கலாச்சாரமண்டபம், வண்ணார் பண்ணைசிவன்தேவஸ்தானம் நல்லூர் மங்கயற்கரசி பாடசாலையில்அமைந்துள்ள இராமநாதன் ஆய்வு நிறுவனம், நல்லூர் கந்தசாமிகோவில், திருநெல்வேலி சைவ சிறுவர் இல்லம் ஆகியவற்றுக்கும் சென்றுபார்வையிடவுள்ளார்.

## உலக ஆசிரியர் தினவிழா

யா / நயினாதீவு மகாவித்தியாலய விடுகை வருட மாணவ மன்றத்தினால் நடாத்தப்படும் ஆசிரியர் தின விழா 6-10-2001ஆம் திகதியன்று மன்றத் தலைவர்

செல்வன் பா. கீதன் தலைமையில்
நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலய உதவிப் கல்விப்பணிப்பாளர்

திரு G. V. இராதாகிருஷ்ணன் அவர்களும்
சிறப்பு விருந்தினர்களாக

திரு சோ. தில்லைநாதன் அவர்கள்
வேலணைக் கோட்ட கல்வி அதிகாரி

திரு ந. கருணாகரகுருமூர்த்தி ஜே. பி. யு. எம்
தலைவர், வேலணைப் பிரதேச சபை

திரு ப. க. குகதாசன்
முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரி, வித்தியாலய அதிபர்

திரு சோ. பகீரதன்
அவர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கு கொள்ளும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றது இந்நாளில் ஓய்வுபெற்ற, சேவையிலுள்ள அனைத்து அதிபர்கள் ஆசிரியர்களும் நலம் பெற்று வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

நயினாதீவு மகாவித்தியாலய
மாணவ சமூகத்தினர்

பிரசுர அன்பளிப்பு
தர்ஷி ஒடியோ அன் போட்டோ
8-ம் வட்டாரம், நயினாதீவு. (கி/2689)

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ விதாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.